## தி.மு.க. பொறியாளர் அணி

# ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## பொறியாளர் அணிச் செயலாளர் கு. கருணாநிதி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு **புதுக்கோட்டை வடக்கு** மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. பொறியாளர் அணியின் ஒன்றிய, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

#### புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - கார்த்திகேயன், அம்மையாப்பட்டி, கடையக்குடி அஞ்சல், புதுக்கோட்டை தாலுகா புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வெங்கடேசன், குறியாபுரம், ஆட்டாங்குடி அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம். 2) செல்வ கணபதி, காயாம்பட்டி, வடவாளம் அஞ்சல். புதுக்கோட்டை மாவட்டம். 3) ஹரிஹரன், புத்தாம்பூர் மற்றும் அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம். 4) ஜோயல் ஸ்டாலின், அன்னம் மாள்புரம், திருக்கோகர்ணம் அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம். 5) செந்தில்குமார். வடவாளம் மற்றும் அஞ்சல். புதுக்கோட்டை மாவட்டம். 6) சிவசங்கர், பாரதிநகர், கட்டியாவயல், ராஜகோபாலபுரம் அஞ்சல். புதுக்கோட்டை மாவட்டம். 7) ஆறுமுகம், சீப்புகாரன்பட்டி புதுக்கோட்டை மாவட்டம்.

#### புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ச.கதிர்வேல், வளவம்பட்டி, வளவம்பட்டி அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வீக. பிரதீஸ், காட்டுப்பட்டி, பெருங்களூர் அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம். 2) க.சுகன்ராய், திருவள்ளுவர் நகர், ஆதனக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம். 3) வெ.கருப்பையா, கள்ளர் தெரு, ஆதனக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம். 4) கா.மாதேஸ்வரன், நெறிஞ்சிப்பட்டி, வாராப்பூர், புதுக்கோட்டை மாவட்டம். 5) ப.பிரவீன், நெறிஞ்சிப்பட்டி, வாராப்பூர். புதுக்கோட்டை மாவட்டம். 6) க.பூபதி, ஆதனக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம்.

#### கறம்பக்குடி தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - பா.மதிவாணன், கரு.ராஜா குடியிருப்பு, கரு.வடதெரு, வாணக்கன்காடு அஞ்சல், கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரெ.அருண்பாண்டியன், கருப்பாக்கோன் தெரு. கோட்டைக்காடு அஞ்சல், கறம்பக்குடி. புதுக்கோட்டை மாவட்டம். 2) கி.கண்ணன், மா.புதுப்பட்டி, மாங்கோட்டை அஞ்சல், கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம். 3) ரா.பாலமுருகன், ராஜா குடியிருப்பு, கருவட தெரு, கறம்பக்குடி புதுக்கோட்டை மாவட்டம். 4) ஐ.பிரகாஷ், ஆயிப்பட்டி, கருப்பட்டிபட்டி. புதுக்கோட்டை மாவட்டம். 5) க.நல்லசிவம், காத்தான்விடுதி, மாங்கோட்டை அஞ்சல் புதுக்கோட்டை மாவட்டம். 6) ர.குமாரசாமி, உடையார் தெரு, வாணக்கன்காடு புதுக்கோட்டை மாவட்டம்.

#### கறம்பக்குடி வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - லெட்சுமணன், அங்கன்விடுதி காடம்பட்டி அஞ்சல், கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வேல்முருகன், தெற்குத் தெரு, புதுவிடுதி ரெகுநாதபுரம் அஞ்சல், கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம். 2) இளங்கோவன், செங்கமேடு, வெட்டிக்காடு அஞ்சல், கறம்பக்குடி தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 3) மகாலிங்கம், தொண்டைமான் புஞ்சை அக்கரைவட்டம் அஞ்சல், கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம். 4) அக்கீம், காட்டாத்தி, நம்பிவயல் அஞ்சல், கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம். 5) பழனிவேல், பத்துத்தாக்கு, வெட்டிக்காடு அஞ்சல் கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம். 6) விக்னேஷ்வரன் புதுவிடுதி நடுத்தெரு, ரெகுநாதபுரம் அஞ்சல். கறம்பக்குடி தாலுகா புதுக்கோட்டை மாவட்டம்.

#### குன்றாண்டார்கோவில் கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - எஸ்.கார்த்திக் வெள்ளப்பிள்ளையார்பட்டி கண்ணாங்குடி ஊராட்சி, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) சித்திரவேல் கொப்பம்பட்டி ஊராட்சி குளத்தூர் தாலுகா. புதுக்கோட்டை மாவட்டம். 2) எம். ஆறுமுகம் நெய்வேலி, தெம்மாவூர் ஊராட்சி குளத்தூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம் 3) ப.முருகன் ராஜாப்பட்டி, செங்களூர் ஊராட்சி, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 4) மருதமுத்து ரெகுநாதபுரம், புலியூர் ஊராட்சி குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் 5) குணசேகர் வீரப்பட்டி, புலியூர் ஊராட்சி குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

#### குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றியம்

அமைப்பாளர் - பி.செல்லத்துரை, மங்கதேவன்பட்டி, நாஞ்சூர் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ச.முருகானந்தம், சின்ன ஊரணிப்பட்டி, தா.கீழையூர் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் 2) த.வசந்த், உடையாளிப்பட்டி, உடையாளிபட்டி அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 3) வீ.வீரானந்தன், பெரம்பூர், கிள்ளனூர் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மவாட்டம். 4) ரா.கண்ணன், தண்டுகரைமேடு, வாலியம்பட்டி அஞ்சல். குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 5) த.சண்முகம், தா.கீழையூர் மற்றும் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

#### குன்றாண்டார்கோவில் மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - அருண்குமார், ஒடுக்கூர் மற்றும் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மணிபிரகாஷ், காமராஜ்நகர், இளையாவயல், குளத்தூர் தாலுகா புதுக்கோட்டை மாவட்டம். 2) பார்த்திபன். ஆயக்குடிவயல், மேலப்புதுவயல், குளத்தூர் தாலுகா. புதுக்கோட்டை மாவட்டம். 3) நெப்போலியன், மூட்டாம்பட்டி, வைத்தூர் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் 4) சதீஸ்குமார், வாழமங்கலம் மற்றும் அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 5) பாண்டிச்செல்வம், தட்டாம்பட்டி, உப்பிலியக்குடி அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

#### கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சுபாஷ் அண்டனூர், வேலாடிப்பட்டி புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரியாஸ் முஸ்லீம் தெரு, கல்லாக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம். 2) முத்துச்சாமி ஒத்தவீடு, முள்ளிக்காப்பட்டி புதுக்கோட்டை மாவட்டம். 3) அசாருதீன் சின்ன அரிசிக்காரத்தெரு, கந்தர்வகோட்டை புதுக்கோட்டை மாவட்டம். 4) சத்தியமூர்த்தி குருவாண்டான் தெரு, கல்லாக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம். 5) சரவணன் கட்டுநாவால் புதுக்கோட்டை மாவட்டம். 6) சக்திவேல் கள்ளர்தெரு, கல்லாக்கோட்டை புதுக்கோட்டை மாவட்டம்.

#### கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ம.மணிகண்டன் கு,நாயக்கர்பட்டி, ஆத்தங்கரைப்பட்டி அஞ்சல், கந்தர்வகோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா.ரகுவரன், அரியாணிப்பட்டி, கந்தர்வகோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 2) ம.பிரகாஷ், கீழத்தெரு, புதுநகர் அஞ்சல், கந்தர்வகோட்டை தாலுகா. புதுக்கோட்டைமாவட்டம். 3) ஆ.திராவிடமணி, வடுகப்பட்டி, கந்தர்வகோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 4) க.கார்த்தி கோமாபுரம் அஞ்சல், கந்தர்வகோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 5) சு.ஞானவடிவேல், புனல்குளம், கந்தர்வகோட்டை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

#### விராலிமலை மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ஆ. சாமிநாதன் 325, புணைமூ அப்துல் கலாம் தெரு, சிதம்பரம் கார்டன், விராலிமலை புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) இராம்பிரபாகரன், 867, விராலிமலை, புதுக்கோட்டை 2) சி.சுப்பிரமணி சீல்நாயக்கன்பட்டி, விராலிமலை, புதுக்கோட்டை 3) ராஜபாரதி, கொடும்பாளூர் அஞ்சல், விராலிமலை, புதுக்கோட்டை. 4) அ.ரவிச்சந்திரன் 136, களப்பன்னூர், கொடும்பாளூர், விராலிமலை புதுக்கோட்டை 5) ச.ஹேம்நாத் 633, தேரடி கிழக்கு, விராலிமலை புதுக்கோட்டை.

#### விராலிமலை மத்திய ஒன்றியம்

அமைப்பாளர் - அ.ஹேமச்சந்திரன், விராலூர் மற்றும் அஞ்சல், விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சு.தேவராஜ், அக்கல்நாயக்கன்பட்டி, வேலூர் அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம். 2) பெ.ஞானபிரகாஷ், அக்கல்நாயக்கன்பட்டி, தோப்பட்டி பண்ணை, கத்தலூர், வேலூர் அஞ்சல். புதுக்கோட்டை மாவட்டம். 3) செ.வினோத், 225, தன்னாங்குடி, இருந்திரப்பட்டி அஞ்சல், இலுப்பூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 4) ச.வேலுச்சாமி, ரோட்டாத்துப்பட்டி, முல்லையூர் அஞ்சல், விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம். 5) ஆ.வினோத், பாரப்பட்டி, பொருவாய் அஞ்சல், விராலிமலை தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

#### விராலிமலை கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ப.லோகேஷ்வரன், 240, துளுக்கம்பட்டி, விளாப்பட்டி அஞ்சல், இலுப்பூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சா.முருகானந்தம், 27ஏ, வீரம்பட்டி, லெட்சுமணன்பட்டி அஞ்சல், குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம் 2) த.மகேந்திரகுமார், களத்துப்பட்டி, மாங்குடி. விளாப்பட்டி அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம். 3) ர.கார்த்திகேயன், 369, விளாப்பட்டி மற்றும் அஞ்சல், இலுப்பூர் - தாலுகா, புதுக்கோட்டை மாவட்டம்.

#### கறம்பக்குடி பேரூர்

அமைப்பாளர் - சே.முகமது அப்துல்லா, பெரியகடை வீதி, கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பெ.ராகதேவன், வடக்கு தெரு, கறம்பக்குடி. புதுக்கோட்டை மாவட்டம். 2) மு.முகமது ஆசிக்ஜமால், வாணியத்தெரு. கறம்பக்குடி புதுக்கோட்டை மாவட்டம். 3) ரா.சூரியபிரகாஷ், தென்னகர், கறம்பக்குடி. புதுக்கோட்டை மாவட்டம். 4) ச.கார்த்திக், கச்சேரி வீதி, கறம்பக்குடி, புதுக்கோட்டை மாவட்டம்.

#### கீரனூர் பேரூர்

அமைப்பாளர் - அ.ராஜூவ்காந்தி, எழில்நகர் 6-ம் வீதி, கீரனூர். புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கு.கார்த்திக், பழைய கல்லுகடை தெரு, கீரனூர். புதுக்கோட்டை மாவட்டம். 2) பு.முரளிதரன், புலியூர்ரோடு மேற்கு பகுதி. கீரனூர் புதுக்கோட்டை மாவட்டம். 3) எஸ்.சேக் அகமது பாஷீத், வாரி வடக்கு வீதி, கீரனூர் புதுக்கோட்டை மாவட்டம்.

#### இலுப்பூர் பேரூர்

அமைப்பாளர் - பி.ஹரிஹரசுதன் வடுகர்தெரு, இலுப்பூர் புதுக்கோட்டை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஹரிஹரன் 12, கோட்டை தெரு, இலுப்பூர் புதுக்கோட்டை மாவட்டம். 2) முத்துராஜமாணிக்கம், 14, பழைய சந்தைப்பேட்டை இலுப்பூர் புதுக்கோட்டை மாவட்டம். 3) பிரபு 14, பள்ளிவாசல் காடு, இலுப்பூர் புதுக்கோட்டை மாவட்டம்.

**குறிப்பு : அன்னவாசல் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய ஒன்றியங்கள் மற்றும் அன்னவாசல் பேரூர் பின்னர் அறிவிக்கப்படும்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18

**கு. கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி

---

# தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா. திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## அமைச்சர்கள் கலந்து கொண்டனர்!

*சென்னை, பிப். 20 - தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர் (19.02.1855 - 28.04.1942) அவர்களின் தமிழ்த்தொண்டினைப் போற்றும் வகையில் ஆண்டு தோறும் பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளன்று தமிழ்த் தாத்தாவின் திருவுருவச் சிலைக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சித் துறையால் மாலை அணிவித்து மலர்வணக்கம் செய்யப்பட்டு வருகிறது.*

*வான்புகழ் தமிழையும் வங்கக் கடற்காற்றையும் தமிழ் மூச்சுடன் உலகுக்கு உவந்தளித்த மகாமகோபாத்தியாய, மகாவித்துவான் உத்தமதானபுரம் வே.சாமிநாதையர் - டி.லிட் அவர்களின் 172ஆம் பிறந்தநாளான 2026 பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாளான நேற்று (வியாழக்கிழமை) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் எழுபத்து எட்டு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட திருவுருவச் சிலைக்கு காலை 9.15 மணிக்கு மலர் வணக்க நிகழ்ச்சி நடைபெற்றது.*

*திராவிட வித்யா பூஷணம் உ.வே.சாமிநாதையர் 17 ஆம் வயதில் தஞ்சாவூர் திருவாவடுதுறை சைவ ஆதீனத்தில் தமிழ் கற்பித்துக் கொண்டிருந்த புகழ் பெற்ற மகா வித்துவான் என அழைக்கப்பட்ட தமிழறிஞர் திருச்சிராப்பள்ளி மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் ஐந்தாண்டுக் காலம் பயின்று தமிழறிஞராக மிளிர்ந்தார். தொடக்கத்தில் கும்பகோணத்திலிருந்த கல்லூரி ஒன்றில் ஆசிரியராகப் பணியில் இருந்த உ.வே.சா. அவர்கள், பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியில் (1903 - 1919) பேராசிரியராகப் பணிபுரிந்தார். அழிந்து போகும் நிலையில் ஓலைச் சுவடிகளிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் தேடித் தேடி, அச்சிட்டுப் பதிப்பித்தார். அச்சுப்பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் அறியச் செய்தார்.*

*90க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப் பதித்தது மட்டுமின்றி 3000க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்து ஏடுகளையும் சேகரித்திருந்தார்.*

*பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில் ஐந்து நூல்கள், சீவக சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களையும் பல்வகை சிற்றிலக்கியங்களையும் பதிப்பித்தார். தாம் பதிப்பித்த ஒவ்வொரு நூலிலும் தம் புலமை மாட்சியை முன்னுரையில் தெளிவாகப் புலப்படுத்தினார். குறுந்தொகைக்கு உ.வே.சா. உரையெழுதிய பொழுது அவருக்கு வயது எண்பத்திரண்டு. நூறுப் பக்கத்தில் ஆராய்ச்சி முன்னுரை எழுதியிருப்பது பதிப்பிற்கு அணிகலனாகத் திகழ்கிறது. உ.வே.சா. ஒரு பல்துறைக் களஞ்சியம், உரையாசிரியர், உரைநடை ஆசிரியர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், பேராசிரியர், பாடலாசிரியர், இசைக்கலைஞர் எனப்பல பாங்குகளில் தம் தலைமை மாட்சியை நிறுவியவர்.*

*செந்தமிழ்த்திலகமாய்த் திகழ்ந்த அவரின் நினைவு நீங்காது நிற்க அவர் மறைந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவர் பணியாற்றி ஓய்வு பெற்ற சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தின் வாயிலில் அவரது தமிழ்ப்பணியைப் போற்றும் விதமாக 1948, மார்ச் 7 ஆம் நாளன்று உ.வே.சா. வின் உருவச்சிலை நிறுவப்பட்டது. அதில் அவர் வாழ்நாளில் பெற்ற பாராட்டுகள் யாவும் குறிக்கப்பட்டதுடன் மகாகவி பாரதியாரின் வாழ்த்துப் பாடலின் இறுதி இரு வரிகளும் பொறிக்கப்பட்டுள்ளது.*

*உ.வே.சாமிநாதையரின் நினைவினைப் போற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அலுவலர்களும், தமிழறிஞர்களும், பொது மக்களும் மலர் வணக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

*இந்நிகழ்ச்சிக்கான முன்னெடுப்புகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டிருந்தது.*

---

## திருப்பூர் தெற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.ஆர்.பாபு அவர்கள் உடுமலைப்பேட்டை தெற்கு ஒன்றியப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவர் தான் வகித்துவந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்ட காரணத்தால்,

திருப்பூர் தெற்கு மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2026, பிப்ரவரி 20 (வெள்ளிக் கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**”

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 17.2.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---

## தென்காசி வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் தென்காசி வடக்கு மாவட்டத்தில், ஒரு பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

தென்காசி வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 20 ( வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/-வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.”

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் தென்காசி வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

## மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல்!

# மகாராஷ்டிரா துணை முதலமைச்சர் அஜித்பவார்- முனைவர் ச.சீ.இராசகோபாலன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம்!

## சட்டப் பேரவையில் நிறைவேற்றம்!

*சென்னை, பிப். 20 - சட்டப் பேரவை நேற்று முன்தினம் கூடியதும் மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் காரைக்குடி ந.சுந்தரம், குடியாத்தம் கு.லிங்கமுத்து ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.*

*அதேபோன்று மகாராஷ்டிரா மாநில துணை முதலமைச்சர் அஜித் பவார், மூத்த கல்வியாளர் முனைவர் ச.சீ.இராசகோபாலன் ஆகியோர் மறைவுக்கு பேரவையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*மறைந்த இப்பெருந்தகைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பேரவையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரு மணித்துளிகள் அமைதி காத்தனர்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.பி.கே. தங்கவேலு

## பிப்ரவரி 20 (2017)



**ஆலங்குடி பகுதியில், கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற துவக்கிய இவர், ஆலங்குடி வட்ட துணைச் செயலாளர், திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், மாவட்டப் பொருளாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து பணியாற்றிய இவர், மறைவெய்தியபோது புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.**

**பாத்தம்பட்டி ஊராட்சி தலைவராகவும், திருவரங்குளம் ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**